**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.118/2018**

2025–ம் வருடம் அக்டோபர் திங்கள் 17–ம் நாளன்று 15 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.19–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | : **ராஜேந்திரன்** | **தொழில்** | : |
| **த/பெ.** | : | **வட்டம்** | : |
| **முகவரி** | : | **மதம்** | : |
| **ஜாதி** | : | **வயது** | : |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 15 வது பிரதிவாதியின் கணவர் ஆவேன். அவர் தரப்பாக நான் சாட்சியம் அளிக்கிறேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன்.

15 வது பிரதிவாதி தரப்பினராக சாட்சியம் அளிக்கும் ராஜேந்திரன் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.105 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15 வது பிரதிவாதியின் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.106 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கடந்த 30.09.2008 ஆம் தேதிய 15 வது பிரதிவாதியின் பெயரிலான கிரைய ஆவணம் எண்.6208/2008 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.107 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வில்லங்க சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.108. ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வில்லங்க சான்றிதழ் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

15 வது பிரதிவாதி ஈஸ்வரி பெயரிலான கூட்டு ப்ட்டா எண்.1336 ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.109 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கடந்த 27.04.2018 ஆம் தேதிய DTCP Registration No.DTCP/P/0144499/2017 ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.110 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் புகைப்பட நகல்களை தாக்கல் செய்தததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.) வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1 முதல் 6, 8 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 50, 52 முதல் 62, 64, 65, 67, 68, 69, 70 முதல் 75, 77 முதல் 87, 89 முதல் 98, 100, 102, 104 முதல் 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது கரூர் மாவட்டத்தில் காந்திகிராமத்தில் குடியிருந்து வருகிறேன். என் மனைவி இந்த வழக்கில் 15 வது பிரதிவாதி ஆவார். அவர் சார்பில் நான் சாட்சியம் அளிக்கிறேன். மேற்சொன்ன என் சொந்த ஊரிலிருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 15 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். தும்பிவாடி கிராமத்தில் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. 106 நபர்கள் கிரையம் பெற்றதற்காக நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால்

இல்லை. பி.வா.சா.ஆ.108 வில்லங்க சான்றிதழ் எந்த தேதியிலிருந்து எந்த தேதிவரை வாங்கினீர்கள் என்றால் இன்றைய தினம் தான் நான் வில்லங்க சான்றிதழை ஜெராக்ஸ் கடையிலிருந்து பெற்றேன். உங்கள் மனைவி கிரையம் வாங்கிய பி.வா.சா.ஆ.107 செல்லாததால் அதன் அடிப்படையில் வாங்கிய பி.வா.சா.ஆ.109 கூட்டுப்பட்டாவும் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.107 நீங்கள் வாங்கிய கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8 ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்றும் ஆகையால் பி.வா.சா.ஆ.107–ன் கீழ் உங்களுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல செட்டில்மெண்ட் தாசில்தாரிடம் 1966 ல் ரவிச்சந்திரன் வாங்கியுள்ளார். செட்டில்மெண்ட் தாசில்தார் கொடுத்த உத்தரவு செல்லாது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.110 DTCP அப்ரூவல் ஆவணம் வழக்கிற்காக போலியாக நீங்கள் தயார் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. Registration No.DTCP/P/0144499/2017 என்றும் பணம் செலுத்திய தேதி 2018 என்றும் தேதிகளில் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் சரிதான். ஆகையால் நீங்கள் பி.வா.சா.ஆ.110 DTCP அப்ரூவல் ஆவணம் ஆவணத்தை போலியாக தயார் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்திற்கு இன்று சாட்சியம் அளிக்க யார் உங்களை அழைத்து வந்தார்கள் என்றால் வழக்கறிஞர் அழைத்தின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.